பதிவு எண். எம். 8123. தமிழியக்க நாளிதழ் விலை காசு 6.

# குறள் நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்: சி. இலக்குவனார் எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி

கி. மு. ஏழாம் நூற்றுண்டுக்கு முற்பட்ட தமிழக நிலையை அறிவதற்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆசிரியர் இலக்குவனரால் எழுதப்பட்டுள்ள தொல்காப்பிய ஆராய்ச்சியைப் படியுங்கள்.

தமிழ் விலை உரு. 4-00
ஆங்கிலம் ,, ,, 25-00

கிடைக்குமிடம்:
"குறள் நெறி"
வெளியீட்டகம்
மதுரை 5.

மலர் 1 | மதுரை ஐப்பசி ௨௦ (5-11-66) வெளியூர் ஐப்பசி ௨௧ (6-11-66) | இதழ் 140

# 5-வது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி இந்திரா!

## நிதிநிலை இடமளித்த பின்னரே முடிவு கூறப்படும்!

புதுதில்லி. நவ—4

நிதி நிலைமை, தொழில்நுட்ப ஆற்றல் ஆகியவற்றை நன்கு ஆய்ந்த பின்னரே ஐந்தாவது ஐந்தாண்டு நிறுவுவது பற்றி முடிவுக்கு வரமுடியும் எனத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி இன்று மக்களவையில் கூறினார்.

மக்களவையில் கேள்வி நேரத்தில் ஐந்தாவது ஐந்தாண்டு தொடர்பான கேள்விகட்கு அத்துறை அமைச்சர் டி.என். சிங் விடையளித்துக் கொண்டிருக்கையில் குறுக்கிட்டு தலைமை அமைச்சர் இந்திரா காந்தி இங்ஙனம் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

இதுபற்றிய எல்லா மாநிலங்களின் வேண்டுகோளும் வேறுபாடின்றி ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டில் இப்போதைய பொருளாதார நிலைமை மிகவும் சீர்கேடாகவுள்ளது. இந்நிலையில் எவ்வித் திட்டங்களையும் உறுதிப்படுத்திக் கூறவியலாது.

"இந்நிலையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவைக் குறைப்பது பற்றியும் அரசு ஆழ்ந்து ஆய்வு நடாத்தி வருகிறது"

இவ்வாறு தலைமை அமைச்சர் தெரிவித்தார்.

## முது கலை வகுப்புத் தேர்வில் மூன்றும் வகுப்பு நீக்க நடவடிக்கை

திருவனந்தபுரம். நவ 3—

எம. ஏ., எம். எஃசி. பட்டத் தேர்வுகளில் மூன்றும் வகுப்பு சான்றிதழ் அளிப்பை அறவே னகவிடவேண்டுமெனக் கூறி இன்று கேரளபல்கலைக்கழகக் குழு தேர்வுக் குழுவுக்குப்பரிந்துரை பகர்ந்துளது.

இவ்வழக்கத்தைக் கைவிட வேண்டுமென திரு. உன்னிக்கிருட்டின பிள்ளை ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்வார். மனித இன நலம் நாடுவோர் இதற்கு வரவேற்பு அளித்தனர்.

மூன்றும் வகுப்பெனக் குறித்து சிலரின் நலனை வாழ்நாள் வரையில் கெடுப்பது முறையல்ல. 45 மதிபெண் எடுத்தவருக்குச் சில வடநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இரண்டாம் வகுப்பென மதிக்க, 49 மதிப்பெண் எடுத்தவரை மூன்றும் வகுப்பு எனக் கேரளம் கூறுவது தொழில் துறையில் கேரளத்தவர்க்குகேடு விளைப்பது.

தரத்தைத் தாழ்த்தும்எனச் சிலர் தீர்மானத்தை எதிர்த்தனர். எதுவானுலும் வாக்கெடுப்பு முறையில் இதைத் தீர்மானிப்பதைவிட வல்லுநர் ஆய்வுக்கு விட்டுவிடுவதேநலம் என்பது இவர்கள் கருத்து.

## தமிழக சட்டமன்றில் .....

**குடிதண்ணீர்**

சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது அமைச்சர் சோதி வெங்கடாசலம் நகரசபைகளுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொள்வதற்கு தமிழக அரசு உரூ. இரண்டு கோடி கடனுதவியாக அளிக்க இருக்கிறது என்று தெரிவித்தார்.

அரசினர் துறையில் 41,19700 பேருக்கு இதுவரை பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினர்.

**விசைத்தறி**

தொழிலமைச்சசர் வெங்கடராமன் ஒரு கேள்விக்கு விடையளிக்கையில், தமிழக அரசு 6921 விசைத்தறிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது எனக்கூறினர். இவற்றுள் கூட்டுறவுச் சங்கங்கட்கே முதன்மையளிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

**வண்ணம் மாறும் துணி**

இதனல் கைத்தறித் தொழிலின் வளர்ச்சி குன்றும் என யாரும் அஞ்சவேண்டுவதில்லை எனவும் வண்ணமாறு துணியின் ஏற்றுமதிக் கொள்கையும் மாற்றப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பிய நாடுககளிலும் வண்ணமாறுந் துணி வணிகத்தைப் பெருக்க ஆவன செய்வதற்கு ஐவரடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரையின் படியே இந்திய ஏற்றுமதிக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

## துரிதத் தொடர் வண்டியை நிறுத்தி மாணவர் கிளர்ச்சி

மதுரை, நவ 4—

மதுரை அருகேயுள்ள சமயநல்லூரில் இருந்து பெரும்பாலான மாணவர்கள் மதுரையில் உள்ள கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்வி பயின்று வருகின்றனர். இவர்கள் காலையில் திண்டுக்கல்லில் இருந்து புறப்பட்டு 8-40 மணிக்கு சமயநல்லூருக்கு வந்து சேரும் தொடர்வண்டியில் பயணம் செய்து 9-30 மணிக்கு மதுரை வந்தடைந்து கல்லூரிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் குறித்த நேரத்தில் சென்று விடுவார்கள்.

அண்மையில் இத்தொடர் வண்டி தொடர்ந்து காலத் தாழ்வாக வருவதால் மாணவர்கள் கல்விக்கூடங்களுக்கு குறித்த நேரத்தில் செல்ல இயலாமல் இன்னுலுற்றனர். மாணவர்கள் தொடர்வண்டி நிலைய அலுவலர்களிடம் நிலைமையை எடுத்துக் கூறியும் வண்டி காலத் தாழ்வாக வருவது நிற்கவில்லை. இதனல் பொறுமையிழந்தமாணவர்கள் இன்று காலை சமயநல்லூரில் நிற்காமல் செல்லும் திருவனந்தபுரம் துரிதத் தொடர் வண்டியை நிறுத்தி ஆரவாரம் செய்து பின்னர் அவ்வண்டியிலேயே மதுரை வந்தடைந்து மதுரைத் தொடர்வண்டி நிலையத்தில் ஒன்றுகூடி தொடர் வண்டிகள் காலத் தாழ்வாக வரும்வரை போராட்டம் நடத்துவதென்று முடிவு செய்துள்ளனர்.

கலைக்குழுத் தலைவர் பேராசிரியர் வி. பி. பிள்ளை பல பல்கலைக் கழகங்கள் வேறு வேறு முறையால் குழப்பம் மிகுவது இயல்பே என்றாலும் பல்கலைக் கழகங்கள் கூடி தீர்வு காண்பது நலம் என்றார்.

## நகரவைகட்கு ஆயுள் காப்பீட்டுக்கழகம் கடனுதவி!

சென்னை, நவ. 4

தமிழக நகரவைகட்குக் குடிநீர் ஆகியவை அமைப்பதற்கு ஆயுள்காப்பீட்டுக்கழகம் கடனுதவி அளிக்க முன் வந்துள்ளது. இக்கடனுக்கு 6½% வட்டி செலுத்த வேண்டும், 6 மாதத்துக்கு ஒரு முறை கடன் வாங்கிய தொகைக்கான வட்டியைச் செலுத்த வேண்டும்.

தமிழக நகராட்சிகள் குடிநீர் போக்குக் குழாய் ஆகியவை அமைப்பதற்கான செலவில் 66% தொகையை ஆயுள்காப்பீட்டுக் கழகம் அளிக்கும் எனவும் எஞ்சிய தொகையை மாநில அரசிடமிருந்து கடனகப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் தெரியவருகிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகம் அளித்துள்ள இவ்வரிய வாய்ப்பை சென்னை மாநகராட்சி மன்றமும் பிறநகராட்சி மன்றங்களும் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனத் தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

* * *

குறள்நெறி

தி. வ. ஆண்டு 1997 ஐப்பசி 20 சனி (5—11—66)

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான். — குறள்

# தன் மதிப்புத் திருமணம்.

ஒரு கால் நூற்றாண்டாகத் தமிழ் நாட்டில் தமிழ்த் திருமணம், தன் மதிப்புத் திருமணம் (சுயமரியாதைத் திருமணம்), சீர்திருத்தத் திருமணம், என்ற பெயர்களால் திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. பெயர்கள் தாம் பலவாக உள்ளனவேயன்றி திருமண நடைமுறைகள் வேறுபாடு உடையன அல்ல. இத்திருமணங்களில் திருமண நிகழ்ச்சிக்கு ஒருவர் தலைமை ஏற்பர். மணமக்கள் வாழ்க்கைத்துணை உறுதிமொழி கூறுவர். திருமாங்கல்யம் பூட்டுதலும் (தாலிகட்டுதலும்) மோதிரம் அணிதலும், மாலை மாற்றுதலும் (இவற்றுள் ஒன்றோ பலவோ ஆகும்) நடைபெறும். பலர் வாழ்த்துரை வழங்குவர். இவ்வாறு நடைபெறும் திருமணங்கள் தமிழில் நடைபெறுவதால் தமிழ்த்திருமணம் என்றும், எல்லோரிலும் மேம்பட்டவர் எனக்கூறிக்கொள்ளும் "பிராமணப் புரோகிதர்" இன்றி நடைபெறுவதால் தன்மதிப்பு அல்லது சுயமரியாதைத் திருமணம் என்றும், பழைய திருமண முறைகளில் உள்ள அம்மி மிதித்தல், அருந்ததிகாட்டல், ஏழடி நடத்தல், ஓமம் வளர்த்தல் முதலிய சடங்குகளின்றி நடைபெறுவதால் சீர்திருத்த அல்லது பகுத்தறிவுத் திருமணம் என்றும் அழைக்கப்படுகின்றன.

இவை "அக்கினி சாட்சியாக" (நெருப்பு சான்றாக) நடைபெறுவன இல்லையாதலின் இந்து மதத்திற்குப் புறம்பான திருமணங்கள் ஆகா; ஆகவே சட்டப்படி செல்லா எனக் கூறப்பட்டு விட்டதால் இத்திருமணத்திற்கு சட்டத்தின் ஒப்புதலும் வேண்டும் என்று கருதும் நிலை ஏற்பட்டுவிட்டது. ஆகவே தமிழகச் சட்டமன்றத்தில் இத்திருமணத்தைச் சட்டப்படி ஏற்கும்படி சட்டம் இயற்றப்பட வேண்டுமெனப் பல தடவை முயன்றும் பயன்கிட்டவில்லை. நேற்றுக்கூட தி. மு. க. உறுப்பினர் திரு. செ. மாதவன் இத்திருமண விதிக்குத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்தார். பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட ஆளும் கட்சி ஏதோ காரணம் கூறித்தள்ளி விட்டது.

இத்திருமணமுறை இத்தமிழ்நாட்டில் உருவாகு தற்குக் காரணமாயிருந்த பெரியார் இராமசாமி அவர்கள் இன்று காங்கிரசுக்கட்சியின் வெற்றிக்கென அல்லும் பகலும் அயராது உழைத்து வருகின்றார். அவருக்கு நன்றியுடன் மதிப்புக் கொடுப்பதற்காகவேனும் இதனை ஏற்றுக்கொண்டு இத் திருமணமுறை செல்லும் எனத் தரும் விதிமுறைகளைப் புகுத்தியிருக்கலாம்.

இத்திருமணமுறை இந்நாட்டுக்குப் புதிதன்று. ஆரியர்களும் அவர்தம் பழக்க வழக்கங்களும் இந்நாட்டில் புகுந்து செல்வாக்குப் பெறுவதன் முன்னர், தமிழ்நாட்டில் நடந்து வந்த ஒன்றுதான். அதனையே இப்பொழுது புதுப்பித்துள்ளோம்.

திருமணமுறை செல்லும் எனத் தரும் விதிமுறைகளைப் புகுத்தியிருக்கலாம்.

இத்திருமணமுறை இந்நாட்டுக்குப் புதிதன்று. ஆரியர்களும் அவர்தம் பழக்க வழக்கங்களும் இந்நாட்டில் புகுந்து செல்வாக்குப் பெறுவதன் முன்னர், தமிழ்நாட்டில் நடந்து வந்த ஒன்றுதான். அதனையே இப்பொழுது புதுப்பித்துள்ளோம்.

தமிழர்கள் இந்துக்கள் அல்லர். இதனைப் பெரியார் அவர்கள் முன்பெல்லாம் வற்புறுத்திவந்துள்ளார்கள். ஆகவே உண்மையை ஆராயுமிடத்து, புரோகிதத் திருமணம் தான் தமிழர்கட்கு உரியன அல்ல, சட்டப்படிச் செல்லாதன எனக்கூறத்தக்கன. புதிது எனக் கருதப்படும் தமிழ்த்திருமணம் அல்லது தன்மதிப்புத் திருமணம்தான் தமிழர்க்கு உரியன. தமிழக சட்டப்படிச் செல்லும். தகுதியுடையது. ஆனால் தமிழர்கள் இந்துக்கள் ஆக்கப்பட்டுவிட்டார்கள். (இந்துவல்லாத) தமிழர்க்கு இந்துச் சட்டம்தான் உரியது எனச் சுமத்தி விட்டார்கள். ஆகவே தமிழ்நாட்டில் தமிழர்கள் விரும்பி நடத்திக்கொள்ளும் திருமணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்படாத இழிநிலை தோன்றியுள்ளது. ஆகவே இனி நாம் செய்யவேண்டியது என்ன? தமிழர்கள் இந்துக்கள் அல்ல என்ற கிளர்ச்சியைத் தொடங்கி இந்து மதத்தினின்றும் விடுதலை பெறுவதுதான். தமிழர் சட்டம் என்ற ஒன்றை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். ஆவணங்களில் இனம், மதம் பற்றிக் குறிப்பிடும் நிலை ஏற்பட்டால் தமிழர் என்றே குறிப்பிடல் வேண்டும். 'இந்து' என்று கூறினால் நமக்குள்ள நிலை இழிந்த 'சூத்திர' நிலைதான். நாமே சென்று விலங்கினுள் மாட்டிக்கொண்டு விலங்கை உடைத்து எறி என்று வேண்டுவதுபோல் நமக்குரித்தல்லாத 'இந்து' மதத்தில் புகுந்து கொண்டு நம்மைஇழிவுபடுத்தும் முறைகளை அகற்று என்பது பேதைமையாகும்.

தமிழர் என்று கூறுவோம்; தன்மதிப்புப்பெறுவோம்! தன் மதிப்புத் திருமணம் தானே மதிக்கப்பெறும். நமக்காகத்தான் சட்டமேயன்றி சட்டத்திற்காக நாமில்லை.

## இந்தோ-அமெரிக்க வேளாண்மைக் கடன் உதவிச் சங்கம்

புதுதில்லி நவ. 3— இப்போதுள்ள PL—480 உருபா நிதியை வைத்துக் கொண்டு வேளாண்மைக் கடனுதவி அமைப்பொன்றை உருவாக்கலாமென்ற கருத்தை அமெரிக்கா இந்திய அரசுக்கு அறிவித்துள்ளது.

கற்றறிந்தோர் பொருளாதார அறிஞர் மக்களவை உறுப்பினர் எனப் பலவித பெரும் எதிர்ப்பிருந்ததால் இந்நிதியைக்கொண்டு இந்தோ—அமெரிக்கக் கல்வி அமைப்பு ஏற்படுத்துவதாக இருந்த திட்டம் கைவிடப்பட்டது.

அமெரிக்காவிடமுள்ள பெருந்தொகையை வேளாண்மைத் துறையில் பயன்படுத்த தலைவர் சான்சன் கொண்டுள்ள ஆர்வத்தை அமெரிக்கத் தூதுவர் சார்லிபவுல்சு இந்திய அரசுக்கு எடுத்துக் கூறினர்.

தக்கதருவாயில் தந்த நல்வாய்ப்பெனவே இதனை ஏற்க வேண்டும். இந்திய இருப்பு வங்கி கடன் நிதி உதவ கிளை

(5-ம் பக்தி பார்க்க)

## கிளர்ச்சிகட்குப் பிறப்பிடம் காங்கிரசே!
### மக்களவையில் கிருபளானி

புதுதில்லி நவ. 3— "நாட்டில் பரவலாக நடைபெற்றுவரும் கிளர்ச்சிகட்குக் காரணம் காங்கிரசாட்சியே" என மக்களவையில் ஆச்சாரிய கிருபளானி கூறினர்.

அவர் மேலும் உரையாற்றியதாவது:-

"எதிர்க்கட்சிகள் குழப்பத்தை மிகுதிப்படுத்துவது உண்மையே எனினும் இக்குழப்பத்திற்கு முதற்காரணம் காங்கிரசே என்பது மறுக்க இயலாத உண்மை. பல்வேறு கிளர்ச்சிகளும் ஆரவாரங்களும் இன்றைய ஆட்சியின் திறமையின்மையால் தான் நிகழ்ந்துள.

விரைவற்ற செயல்முறைகளினாலும், மிகுதியான அலுவலகங்களினாலும் இன்றைய ஆட்சி திறமையாகச் செயற்பட இயலவில்லை.

ஆந்திராவில் எண்ணெய்த் தூய்மை நிலையத்தில் நடந்த கிளர்ச்சிகளின்போது காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை நேர்மையானதே. எனினும் காவல் துறையினர் எடுத்த எல்லா நடவடிக்கைகளும் முறையான நடவடிக்கைகள் எனக் கூற இயலாது.

நம்பிக்கையில்லாத் தீர்மானங்களையும் மீண்டும் மீண்டும் கொணர்வது மக்களவையை எள்ளிநகையாடுவது போன்றே அமைந்துள்ளது".

இவ்வாறு கிருபளானி பேசினர்.

இதுவரைக் காங்கிரசுக் கட்சியிலிருந்தவரும், அண்மையில் காங்கிரசுக் கட்சியினின்றும்விலகிவேறோர் எதிர்க்கட்சி அமைப்பை அமைத்துள்ள உமாயூன்கபீர் ஆளுங்கட்சியின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினர்.

எதிர்க்கட்சி வரிசையி

இதுவரைக் காங்கிரசுக் கட்சியிலிருந்தவரும், அண்மையில் காங்கிரசுக் கட்சியினின்றும்விலகிவேறோர் எதிர்க்கட்சி அமைப்பை அமைத்துள்ள உமாயூன்கபீர் ஆளுங்கட்சியின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினர்.

எதிர்க்கட்சி வரிசையிலிருந்து அவர் பேசிய முதல் பேச்சு இதுவே. அவர் தனது உரையில், ஆட்சியின் திறமை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஊழலும் கையூட்டும் நாளுக்கு நாள் மிகுந்து வருகின்றன. இவ்வாட்சியில் கையூட்டுச் செயல்கள் பொறுத்துக் கொள்ளப்படுவதோடு அவற்றிற்கு ஊக்கமும் அளிக்கப்படுகின்றது.

நாணய மதிப்பை மேலும் குறைக்கும் முயற்சிகளில் அரசினர் ஈடுபடக்கூடாது.

உணவுப் பெருக்கத்தை மிகுதிப்படுத்த வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைத் திட்டங்களை முறையாகச் செயலாற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மேல் நிகழ்ந்த இவ்வுரையாடலில் மேலும் பலர் பங்கு கொண்டனர் சிவராவநாராயணன் (காங்கிரசு) எதிர்க்கட்சிகளின் கிளர்ச்சியையும் மாணவர்களின் ஆரவாரத்தையும் கண்டித்துப் பேசினர்.

ஆர். எசு. தாண்டே எதிர்க்கட்சிகள் குடியாட்சிக் கட்டுக்கோப்பைப் பாதுகாக்க ஆவன செய்யவேண்டும்எனக் குறிப்பிட்டார்.

# குறள்நெறி அன்பர்கட்கு வேண்டுகோள்.

குறள்நெறி அன்பர்களே,

மூன்றாண்டுகளாகத் தமிழ்க் காப்புத் தொண்டே தலையாய தொண்டாகக் கொண்டு, வளமான தமிழுக்கு வல்லாருய் வாய்த்த ஆட்சியாளரையும், உலகாண்ட தமிழ்மொழியை ஒதுக்கித் தள்ளி, இலக்கணமே இல்லாத இந்தியை அரியணை ஏற்றிய அவர்தம் அறங்கோடிய செயலையும் இடித்துரைத்து, அவ்வப்பொழுது, குடியாட்சிக்கும் மக்கள் நலனுக்கும் ஊறு ஏற்படும் வகையிலான ஆட்சியாளர்களின் செயல்களையும் எடுத்துக்காட்டி கோல்கோடா ஆட்சிக்குக் குறள் கூறும் இலக்கணத்தையும் அவ்விலக்கணத்தினின்று ஆட்சியாளர்கள் மாறுபடுவதையும் சுட்டிக்காட்டி வந்தோம்.

பயன் ........ உங்களுக்குத்தான் தெரியுமே?

"தொல்காப்பியர் வழித்தோன்றல்களான ஒல்காப்பெருமைத் திருவள்ளுவரும், இளங்கோவும், ஏனைத் தமிழ்ப் புலவோரும், ஓம்பிவளர்த்த ஒண்டமிழ் இருக்க வரலாறே இல்லாத வடமொழியாம் இந்திக்கு இங்கென்ன வேலை?" எனக்கேட்டோம். "மூடர்கள் ஆட்சியிலே அறிஞர்கள் இருக்க வேண்டிய இடம்—சிறைச்சாலை தான்" என்ற கன்பூசியசின் பொன்மொழியை உண்மையாக்கும் வண்ணம் சிறைச்சாலைக்குத் தள்ளியது இன்றைய அரசு.

"அன்னைத் தமிழிருக்க ஆங்கிலக் கல்வி ஏன்?" எனத் தமிழைப் பயிற்று மொழியாக்கக் கொள்கை பரப்பு வேலையில் ஈடுபட்டோம். மீண்டும் சிறைச்சாலை அழைப்பு வந்துவிட்டது.

இத்தனை இடையூறுகட்கிடையேயும் "குறள்நெறி" தன் பணியிற் தளராமல் தொடர்ந்து கொண்டிருந்தது. கலப்புத் தமிழையும், கவர்ச்சிப் படங்களையும் காசாக்கிக் கொண்டிருக்கும் இன்றைய நாளேடுகளின் இழிநிலை போக்கக் "குறள்நெறி" நாளேடாக மலர்ந்தது.

நாளேட்டுக்கு நற்றமிழன்பர்கள் நல்வரவேற்பளித்தனர்; உண்மைதான். இந்தி எதிர்ப்பு முரசமாக இலங்கிவரும் நம் நாளேட்டுக்கு அரசினர் உறுதுணையளிப்பரா? நாளேட்டுக்கு முதன்மையாக வேண்டிய செய்தித்தாள் பங்கீடு நமக்கு உரிய காலத்தில் கிடைக்காத வண்ணம் அரசு இடையூறு செய்தது. நற்றமிழ் காக்கப் புறப்பட்ட நாளேட்டின் பயணம் சிறிது தடைப்பட்டது. மீண்டும் நாளேடு ஐப்பசி பதினாறும் நாள் முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது.

வணிக நோக்கோடு வருவாய்ப் பெருக்கத்திற்காக நாளேடு தொடங்கப்பெறவில்லை. வேற்றுமொழி விரவா வண்டமிழ் நடை பொதுமக்களிடையே பரவ வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுக்காகத்தான் நாளேடு செயற்படவிருக்கிறது.

வாய்ப் பெருக்கத்திற்காக நாளேடு தொடங்கப்பெறவில்லை. வேற்றுமொழி விரவா வண்டமிழ் நடை பொதுமக்களிடையே பரவ வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுக்காகத்தான் நாளேடு செயற்படவிருக்கிறது.

நாளேடு நடத்துவது யானையைக் கட்டித் தீனிபோடுவது போன்றதாகும். பணப்புழக்கம் மிகுதியாக உடையோரும், மிகுந்த செலவு செய்யும் ஆற்றல் படைத்தோரும் தான் நாளேட்டை வெற்றிகரமாக நடத்த இயலும்.

"குறள்நெறி" நாளேடு நடத்த உறுதுணையாக நிற்போர் தமிழ்ப் பெருங்குடி மக்களைத் தவிர வேறு தவிப்போர் எவருமிலர். "நாளேடு நடத்துக—வாங்கிப் படிக்கிறோம்" எனக்கூறலாம். வாங்கிப் படிப்பது மட்டுமன்று. நாளேடு நடத்தவும் உங்கள் உறுதுணை வேண்டப்படுகின்றது.

காரணம்—நாளேடு நடத்துபவர், ஆலை அரசரோ, திரைப்பட நிலைய உரிமையாளரோ, வணிகரோ அல்லர். தமிழ்ப் புலமையைத் தவிர வேறு உடைமைகளோ? வருவாயோ வர வாய்ப்பற்ற தமிழ்ப் பேராசிரியர்—இவ்வாட்சியில் உண்மையான தமிழ்ப் பற்றுடைய தமிழ்ப் பேராசிரியர்களின் நிலை என்ன வென்பதை உங்கட்கு விளக்கிக்கூறத் தேவையின்று. எனவே குறள்நெறியின் வளர்ச்சிக்கு "குறள்நெறி உதவி நிதி" என்றொரு நிதிதிரட்டும் பணியை மேற்கொண்டுள்ளோம்.

தன்னலங் கருதாத தமிழ்ப் பேராசிரியரின் தமிழ்த் தொண்டும், நாளேட்டுப் பணியும் செம்மையுற நடைபெற தம்மாலியன்ற அளவு, உடனே அனுப்புக. அனுப்புவோரின் பெயரும் முகவரியும் குறள்நெறியில் வெளியிடப்படும்.

இன்றமிழ் எழுச்சி முரசமாக தமிழரின், தமிழின் நலன் காக்கும் படைக்கலனை "குறள்நெறி" நாளேடு வெற்றிவாகை சூட தமிழன்பர்கள் அனைவரும் உற்றுழி உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பணம் அனுப்புவோர் ஆசிரியரின் முகவரிக்கே அனுப்புக.

தமிழின் நலன் காக்கும் படைக்கலனை "குறள்நெறி" நாளேடு வெற்றிவாகை சூட தமிழன்பர்கள் அனைவரும் உற்றுழி உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பணம் அனுப்புவோர் ஆசிரியரின் முகவரிக்கே அனுப்புக.

இங்ஙனம்
செயலர்
குறள்நெறி உதவி நிதிக்குழு,
மதுரை—5.

## சென்னையில் புயற்காற்றும் பெருமழையும்
### சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம்

சென்னை, நவ 4— சென்னையில் கடந்தஇரண்டு நாட்களாகப் புயற்காற்றும் மழையுமாக இருக்கிறது. இதனால் 29 பேர் கொல்லப்பட்டுள்ளனர்; பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடிழந்து உள்ளனர். இது குறித்துச் சட்டமன்றில் ஆய்வு செய்யப்பட வேண்டுமென தி. மு. க. உறுப்பினர் இராம. அரங்

அரசுத்துறை அலுவலர்களால் மீட்பு வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. புயலாலும் வெள்ளத்தாலும் துன்புற்றோர்க்கு ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

இதுபற்றி ஓரறிக்கை சட்டமன்றத்தில் 7 அல்லது 8 ஆம் நாள் அளிக்கப்படும் எனவே

சென்னையில் கடந்தஇரண்டு நாட்களாகப் புயற்காற்றும் மழையுமாக இருக்கிறது. இதனால் 29 பேர் கொல்லப்பட்டுள்ளனர்; பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடிழந்து உள்ளனர். இது குறித்துச் சட்டமன்றில் ஆய்வு செய்யப்பட வேண்டுமென தி. மு. க. உறுப்பினர் இராம. அரங்

கண்ணல் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

முதலமைச்சர் பக்தவத்சலம் இதற்கு விடையளிக்கையில்

அரசுத்துறை அலுவலர்களால் மீட்பு வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. புயலாலும் வெள்ளத்தாலும் துன்புற்றோர்க்கு ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

இதுபற்றி ஓரறிக்கை சட்டமன்றத்தில் 7 அல்லது 8 ஆம் நாள் அளிக்கப்படும் எனவே

இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை" எனக் கூறி தீர்மானத்தைத் தள்ளி வைத்தார்.

## அன்பர் அஞ்சல்
### கல்லூரி முதல்வர்களின் கடமை

ஐயா,

இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு சில மாநிலங்களைத் தவிர மற்றெல்லா மாநிலங்களிலும் மாணவர் கிளர்ச்சிகளும், ஆரவாரங்களும் தலைதூக்கியுள்ளன. 'மாணவர் அமைதியின்மை குறித்துக் கல்வியமைச்சர் சக்ளா மக்களவையில் ஓர் அறிக்கை அளிக்கும் அளவிற்கு நடுவண் அரசு இக் கிளர்ச்சிகட்கு முதன்மையளித்தும் வருகின்றது.

ஆனால் கடந்த ஆண்டில் நடைபெற்ற மொழிக் கிளர்ச்சிக்குப்பின் தமிழக மாணவர்கள் எத்தகைய ஆரவாரங்களிலும் தேவையின்றி ஈடுபட்டிலர். எனவே இந்தியாவிலேயே தமிழக மாணவர்கள்தான் அமைதியானவர்கள் எனக்கூறலாம்.

எனினும் தமிழக மாணவர்கள் அமைதியாய் இருப்பதை முதலமைச்சர் பக்தவத்சலம் விரும்பவில்லை போலும்! தூங்குகின்ற புலியின் காலில் இடறிவிடுவதைப்போல, "வருகிற சனவரி 26—இல் மீண்டும் ஒரு கிளர்ச்சி நடைபெறப் போகிறது. அக்கிளர்ச்சி இரும்புக் கரங்கள் கொண்டு அடக்கப்படும்" எனக் கூறி வருகிறார். இங்ஙனம் பொருந்தாக் கூற்றுக்களையும் பொய்யுரைகளையும் முழங்கிவருவதால் இவர்க்கு என்ன பயன்?

இவ்வாறான அரசினரின் நடவடிக்கைகளும் சில கல்

கொண்டு அடக்கப்படும்" எனக் கூறி வருகிறார். இங்ஙனம் பொருந்தாக் கூற்றுக்களையும் பொய்யுரைகளையும் முழங்கிவருவதால் இவர்க்கு என்ன பயன்?

இவ்வாறான அரசினரின் நடவடிக்கைகளும் சில கல்

லூரி முதல்வர்களின் செயல்களும் மாணவர்களைப் பொறுமை இழக்கச் செய்கின்றன; கிளர்ச்சி செய்யவும் தூண்டுகின்றன. சான்றுக்குத் தஞ்சைக்கரந்தைப்புலவர்கல்லூரி நிகழ்ச்சியைக் (4—11—66 குறள்நெறி) கூறலாம்.

"மாணவர்கள் கட்சி அரசியலில் ஈடுபடக் கூடாது" என்னும் கொள்கையை ஏற்றுக் கொண்டு கட்சி அரசியலிற் புகாது, தங்கள் கொள்கைகளைச் செயற்படுத்தத் தங்களுக் கென்றோர் அமைப்பை உருவாக்கிக் கொண்ட மாணவர்கள், கல்லூரியினின்றும், மக்களாட்சி முறைக்கு மாறாக நீக்கப்பட்டுளர்.

மாணவர்களைப் பொறுப்பாக வழிநடத்திச் செல்ல வேண்டிய கல்லூரி முதல்வர்களே இங்ஙனம் பொறுப்பற்ற முறையில் மாணவர்களின் கல்விக்கு இடையூறாக இருப்பின் மாணவர்கள் என் செய்வர்? முறையாகப் பயின்று செம்மையான வாழ்வை உருவாக்கிக் கொள்ள வேண்டிய மாணவர்களை அவ்விதஞ் செய்ய விடாது, முறைநாடி, வழக்கு மன்றத்திற்கு அலையவிடுவது தான் கற்றறிந்த முதல்வர்கட்கு அழகா?

கூடிய விரைவில் இச்சிக்கலுக்கு தீர்வு கண்டு மாணவர்களின் கல்வியைத் தொடரச் செய்யும் பொறுப்பு புலவர் கல்லூரி முதல்வர்க்கு உரியது ஆகும் முதல்வர் ஆவன செய்து, கொந்தளித்துக் கொண்டிருக்கும் மாணவர் உள்ளங்களை அமைதிப்படுத்தி, நடைபெறவிருக்கும் கிளர்ச்சி ஒன்றைத் தடுத்து நிறுத்துவாராக!

அன்பன்,
சா. கிருட்டிணமூர்த்தி
கீழவுழூர்

# எதிர்கால உதவி திட்டப் பலனைப் பொறுத்தது
### நிதி அமைச்சர் அறிவிப்பு

புதுதில்லி, நவ—3 கனடா அமெரிக்கா போய் திரும்பியதைப் பற்றி, மக்களவையில் நிதியமைச்சர் சச்சிந்திர சவுத்திரி, எதிர்கால உதவி நம் நாட்டத்தையும் திட்டப்பெருமையும் பொருத்திராது என்றும் திட்டப் பயன் மிகுதிக்கேற்ப உதவியும் மிகும் என்றும் அறிவித்தார்.

தான் போனது எதுவும் பேசித் தீர்மானிப்பதற்கன்று என்றும், உலகநாட்டு நிதியமைச்சர் மாநாட்டிலும் உலக வங்கி ஆண்டுக் கூட்டத்திலும் கலந்து கொள்வதற்கே என்றும் தெளிவுபடுத்தினர்.

நமது நான்காம் திட்டத்தை உலக வங்கி ஆய்ந்து கூட்டுக் குழுவுக்கு ஒரு அறிக்கை விடுத்தபின் அக்குழு 1967-இல் முதற் காலாண்டில் ஆய்ந்து தன்முடிவைக் கூறும். 1967—68 இல் திட்டப்படி செயற்படுமுனையுமுன், ஏற்ற காலத்தில், நமக்குள்ள உதவி எவ்வளவினதாயிருக்குமென தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்கும்.

நாணய மதிப்புக் குறைப்பின் விளைவாக இறக்குமதித் தளர்ச்சியை வெளிநாடுகள் வரவேற்றுள்ளன.

இன்று நமக்குள்ள இக்கட்டான நிலையை வெளிநாடுகள் பரிவோடு நோக்குகின்றன. நாம் வேளாண்மை வளர்ச்சிக்காக எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கும் நல்ல பாராட்டு உண்டு.

பொதுநலக்கூட்டு நிதியமைச்சரவையில் பிறநாட்டுத் தங்கநாணய நிலையும் உலக நாட்டு நன்மையை நாடி தளர்ச்சி செய்யும் தேவை குறித்தும் பேச்சு நடந்தது.

பிரிட்டன் எடுத்துள்ள ஏற்பாட்டைப் பார்க்க தங்க நாணய வட்டார நிலை' வரும் ஆண்டில் சீர் பெறும். உலக நாட்டு நாணய நெகிழ்வினைக் கருதியும் முன்னேறவேண்டிய நாடுகளின் நலங்கருதியும் உலக வங்கி சிந்தித்துச் செயல்பட வேண்டியது முதலாய கடன் என்பது வற்புறுத்தப்பட்டது.

உலக உதவி நிதி ஆண்டுக் கூட்டம், வளர்ச்சி சங்கத் தேவையை நிறைவுபடுத்தும் தேவையில் கருத்துச் செலுத்தியது. வளர்ச்சி நாடுகளை எதிர்நோக்கும் கடன் பளுவைக் கருத்திற் கொண்டு உதவிப் பெருக்கை விரைவுபடுத்தும் இன்றியமையாமையும் எடுத்துச் சொல்லப்பட்டது.

1967-இல் நடைபெறும் கூட்டத்தில் உலக உதவி நிதிச் சங்கம் வளர்ச்சி நாடுகளின் நலத்தைக் கருத்திற் கொண்டதாக ஆனைப் பரிந்துரை இருக்கவேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேறியது.

இதுவே அமைச்சர் தந்த தெளிவுரைச் சாரம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பல அமைக்க இப்போது திட்டமிட்டுக் கொண்டுள்ளது. பொதுச்சட்ட (PL)-480-இன் திட்டப்படி அமெரிக்க விளைபொருள் விற்பனையால் வந்த தொகை (அ) இந்திய அரசின் இசைவுபெற்ற வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடனாய் உதவுவது நூற்றுக்கு 80 விழுக்காடு ஆகவும் (ஆ) தனியார் திட்டங்களுக்குக் கடனாக 7 விழுக்காடாகவும் (இ) அமெரிக்கா பயன்படுத்த 13 விழுக்காடாகவும் இருக்கும்.

அமெரிக்கர் பயன்படுத்த ஒதுக்கப்பட்டுள்ள உருபா 184 கோடியில் அமெரிக்கத் தூதுவர் அலுவலகச் செலவு 93·5 கோடி நீக்கி பாக்கி 90·5 கோடி இருப்பு உள்ளது.

இதனோடு நடப்பு ஆண்டு வரவைக் கூட்ட ஏறத்தாழ 130 கோடி வேண்டும் வேளாண்மைக் கடனுதவிச் சங்க நிதியாய் அமையலாம்.



பர்மாய் தி. மு. கழகத் தேர்தல் நிதிச்

## சிறப்புக் கூட்டம்

13—11—1966 ஞாயிறு மாலை 7 மணி

தாராவி இராமர் வாடித் திடல்

| | |
|---|---|
| வரவேற்புரை: | த. மு. பொற்கோ |
| தலைவர்: | தொ. து. அன்புச் செழியன் |
| கொடியேற்றுவித்தல்: | வ. பழனி |
| நிதிவழங்கல்: | ஆரியசங்கரன் |

### கலைஞர் மு கருணாநிதி.

சொற்பொழிவாற்றுவார்

மாலை 4 மணிக்கு மாதுங்கா போதார் கல்லூரியிலிருந்து

தோழர்கள்:

சி. நா. சிதம்பரம், எம். வி. முத்தையா

தலைமையில் ஊர்வலம் புறப்படும்.

நன்கொடை: ரூ. 50, 40, 25, 10, 5, 2.

பெண்களுக்குக் கட்டணமில்லை

குறிப்பு: ஒரு ரூபா நன்கொடைச் சீட்டு கிடையாது

திரளாக வாரீர்! தேர்தல் நிதி தாரீர்!!

எம். ஆர். துரை,
பி. ஏ. பிச்சைமணி,
எசு. எம். சுப்பையா,
தொண்டர்படைத் தலைவர்கள்

எசு. தியாகராசன்,
அ. சு. சண்முகவேலு,
செயலாளர்கள்

பம்பாய்—17
4—11—1966

தேர்தல் நிதிக் குழு.

## தேர்தல் படை நிகழ்ச்சிகள்

மாணவர் தேர்தல் படையின் சார்பாக மதுரை மாவட்டம் முழுவதும் கீழ்க்கண்ட ஊர்களில் கூட்டம் நடைபெறும்.

1. திருமங்கலம்
2. மதுரை—திலகர் திடல்
3. ஆரப்பாளையம்
4. மேலூர்
5. ஒட்டன்சத்திரம்
6. வத்தலக்குண்டு
7. ஒத்தக்கடை
8. கொட்டாம்பட்டி
9. வாடிப்பட்டி
10. அலங்காநல்லூர்
11. குட்டுலாடம்பட்டி
12. சோழவந்தான்
13. தேனி
14. தே. கல்லுப்பட்டி
15. திருப்பரங்குன்றம்

திரு.
**ச. அமுதன்**
நிகழ்ச்சிகள்

நவ 13. திருச்சி
14. புதுவாடி
15. கண்டமனூர்
16, சேர்வைக்காரன் பட்டி
17. இராயப்பன்பட்டி
20, 21, 22-சிவகாசித் தொகுதி
26, 27-நாகர்கோவில்
30, தேனி

**முகவரி:-**
ச. அமுதன்
56, சன்னதித்தெரு.
திருவில்லிபுத்தூர்

# மக்களவையினின்றும் எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு!

புதுதில்லி, நவ 3

மக்களவையில் கேள்வி நேர வழக்கத்தைப் பற்றிச் செயல்முறை அறிவுரைக் குழுவின் அறிக்கையின் ஒரு பகுதியைத் திரும்ப அக்குழு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறு அறிக்கையைத் திருப்ப வேண்டியது மறுக்கப்பட்டதால் எதிர்க்கட்சியினர் கூட்டாக மக்களவையை விட்டு வெளியேறினர்.

அதன் ஐம்பதாவது அறிக்கையில் ஏனைய பொருள்களைப் பற்றிப் பேசுவது அரைமணியாகும். "குறையிருப்பின் குறைவுள்ளதை நாள் இறுதியில் எடுத்துக் கொள்ளலாம்'' என்றிருந்தது.

இதனை எதிர்க்க இரு காரணங்கள் உண்டு. இதரப் பொருள்கள் கேள்விவேளைப் பகுதிஎன்பதோடு, அவையின் நாடியறிய நல்ல வாய்ப்பளித்தது. இரண்டாவது நாள் இறுதியில் அவை பெரும்பாலும் காலியாயிருக்கும். அவ்வேளையில் விடுபட்டனவற்றைப் பற்றி வழக்காட எதிர்க்கட்சி விரும்பவில்லை.

எதிர்பாராத விதம் இது பற்றிய பேச்சு ஒருமணி நேரம் நீடித்தது. 50-வது அறிக்கையின் 3-வது பத்தியை நீக்குமாறு திரு. காமத் கொண்டு வந்த திருத்தத்தை ஏற்க எதிர்க்கட்சி வற்புறுத்தியது. இதனைத் திரும்ப வழக்காட எடுத்துக்கொள்ளக் கருதியது என்பது தெளிவு.

அவை அலுவல் அமைச்சர் சின்கா தீர்மானம் மாற்றுவதற்கில்லை எனத் திட்டமாகச் சொன்னது ஏன் என்று தனக்குப் புலனாகவில்லை எனத் திருவேதி கூறினர், ஏனைய தலைவர்கள் இந்தப் பொருள் நிகழ்ச்சி நிரலில் காண்பதற்கில்லையே என்றும் இதுபற்றிய பேச்சோ தீர்மானமோ நடைபெறவில்லையே என்றும் சுட்டிக் காட்டினர் சின்கா இதை இந்தியிற் சொன்னதால் பிறர் புரிந்து கொள்ளாதிருக்கலாம் என்றும், இருந்தாலும் பலபடப் பேசுவதெல்லாம் தீர்மானமகாதென்றும் ஓர் இந்தி உறுப்பினர்சொன்னர்.

திரு. காமத் அவர்களின் திருத்தத்தின் மீதான வாக்கெடுப்பின் பின்னர் அது தோல்வியுற்றது. அதன்மேல் எதிர்க்கட்சியினர் கூட்டமாக வெளிநடந்தனர்.

அவையின் வெளியே எதிர்க்கட்சித் தலைவர்கள் கூடி அன்று முழுவதும் அவைக்குப் போவதில்லை என்பதாக முடிவெடுத்தனர்,

இதற்கிடையில் இவர்கள் அவைத் தலைவரைக் கண்டு 388.ஆம் விதிப்படி 186-ஆம் விதி செயல்படுவது தடைப்படும் என்பதை வற்புறுத்தினர். அதனல் அறிக்கையின் 3–ஆம் பத்தி செயல்முறை அறிவுரைக் குழுவின் ஆய்வுக்குத் திரும்ப வேண்டும் அல்லது அவ்வாய்வினை விதியமைப்புக் குழு ஏற்கவேண்டும். செயல்முறை அறிவுரைக் குழுக் கூட்டத்தில் நடந்ததை அறிந்த காரணத்தால் காங்கிரசு உறுப்பினர் திருத்தத்தை வேண்டுமெனவே தோற்கடிக்க உறுதி கொண்டிருக்கலாம் என்று எடுத்துச் சொன்னர்கள்.

திரு. சின்கா உடன்படுவாரா என்பது இருந்து பார்த்தறிய வேண்டியது. செயல்முறை அறிவுரைக் குழு ஏற்கனவே உள்ள உரிமைகளைப் பறிக்கவில்லை எனப் பக்குவமாய்த் திரு. சின்கா சொன்னலுங்கூட, இத்தீர்மானத்தைக் கைவிட்டாலொழிய எதிர்க்கட்சினர்மக்களவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்பது உறுதி எனத்தான் தோன்றுகிறது.

## கி. ஆ. பெ. விசுவநாதம் பம்பாய் பயணம்

திருச்சி, நவ. 4-

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் இம்மாதம் 16-ஆம் தேதி இரவு சென்னையை விட்டுப் புறப்பட்டுப் பம்பாய்க்குச் செல்லுகிறார். 18-ஆம் தேதி பம்பாய் சண்முகா தயேட்டரில் "குறள் நெறி'' 19-ல் 'நாடகக்கலை' 20-ல் 'இசைக்கலை' 21-ல் பாண்டுப்பில் 'அருள்நெறி' 22–ல் தாராவியில் 'தனித் தமிழ்' 24–ல் 'இளங்கோவும் சிலம்பும்' பற்றிப் பேசி 25-ஆம் தேதி காலை திருச்சி வந்து சேருவார் எனத் தெரிய வருகிறது.

★



## படைக்கருவி ஏந்திய நாகர் எல்லையை மீறுகின்றனர்

இம்பால் நவ. 3–

போர் நிறுத்த எல்லை மீறி மணிப்பூரிலுள்ள உக்ருல் வட்டாரப் பகுதியில் 1000க்கு மேற்பட்ட நாகர்கள் படைக் கருவிகளோடு போனதாக அரசாங்கச் செய்தியொன்று கூறுகிறது.

நாகாலாந்திலிருந்து நிலவறை வழி மணிப்பூரில் புகுந்து உக்ருல் பகுதியில் துண்டுபட்ட காவல் நிலையங்களையும் தற்காப்பு நிலையங்களையும் சுற்றிச் சூழ்ந்திருக்கின்றனர். சிற்றூர் வாழ்நரிடமிருந்து வன்முறையில் பணந்திரட்டுவதாகவுங் கேள்வி.

கிழக்குப் பாகிசுத்தானில் படைப் பயிற்சி பெற்று அவ்வழியே ஐம்பது நாகர்கள் மணிப்பூரில் நுழைந்தாகவும் தகவல். தானியங்கில் வேட்டெஃகுடன் அவர்களை சிங்சோல் அருகில் அக்டோபர் 24–இல் கண்டதாக ஒரு தகவல். குச்சி தேசிய சங்கம் இவர்களுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிகிறது.

## காமராசர் தொகுதி

சென்னை நவ. 3–

காங்கிரசுத் தலைவர் காமராசர் இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் தொகுதியிலிருந்து சட்டமன்றத்துக்குப் போட்டியிடும் வேட்பாளராக நிற்பார் எனத் தெரிகிறது.

தமிழ்நாடு காங்கிரசு வட்டாரத்தில் இச்செய்தி மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டது இவருக்கு எதிராக யார் நிற்பார் என்ற கேள்வியே இங்கு பெரிதும் அடிபடுவது.

தமிழ்நாடுகாங்கிரசு செயற்குழுவிடங் கிடைத்த பட்டியலில் இவர் பெயரில்லை எனவே இவர் இசைவுபெற்று அவ்வட்டாரத்தார் சேர்த்திருக்கலாம் என நம்புகின்றனர்.

## செயற்கை மலருக்கு இயற்கை மணம்

ஆங்கார், நவ 3—

ஆங்-காங்கில் நெகிழ் பொருள் (பிளாஃடிக்)ளால் ஆக்கப்பட்ட பூக்கள் விரைவில் மணந்தரலாம். அவற்றிற்கு மணமூட்டும் வழிவகைகளை சப்பானிய வேதியலார் ஆய்ந்து வருகின்றனர்.

இக்கண்டுபிடிப்பு செயற்கைப் பூத் தொழில் துறையில் பெரியதோர் புரட்சி உருவாகும் என்கிறார் ஒரு வணிகர்.

## அச்சுக் கோப்பாளர் தேவை.

நாளிதழில் பணியாற்றி பயிற்சி பெற்ற அச்சுக் கோப்பாளர்கள் உடனடியாக வேண்டப் படுகின்றனர். தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப ஊதியம் அளிக்கப்படும்.

விவரங்கட்கு நேரில்;
குறள்நெறி அச்சகம்,
12B, சன்னதித் தெரு,
மதுரை-5.

## "குறள்நெறி" நாளிதழ்

தனி இதழ் விலை காசு 6.

அஞ்சல் வழியாகப் பெறுவதற்குத் திங்கள் கட்டணம் உரு. 2-50
ஆண்டுக்கட்டணம் உரு. 25-00
புரவலர் கட்டணம் உரு. 1000-00

விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
விளம்பரங்கள் பெற்று அனுப்புவோர்க்கு 25°/。 கழிவு உண்டு.

"குறள் நெறி" திங்களிருமுறை : தமிழ் :
தனி இதழ் விலை 25 காசு.
ஆண்டுக் கட்டணம் உரு. 6-00
இரண்டாண்டுக் கட்டணம் உரு 10–00
புரவலர் கட்டணம் உரு. 100-00

"குறள்நெறி" திங்களிருமுறை : ஆங்கிலம்:
தனி இதழ் விலை 20 காசு.
ஆண்டுக் கட்டணம் உரு. 5–00

ஊர்கள் தோறும் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

விவரங்கட்கு :
ஆசிரியர்
'குறள்நெறி'
திருப்பரங்குன்றம்
மதுரை–5

ஆசிரியரும் வெளியிடுபவரும் டாக்டர் சி. இலக்குவனர். பொறுப்பாசிரியர் இ. மறைமலை B. Sc. அச்சிட்டது: குறள்நெறி அச்சகம் திருப்பரங்குன்றம் ,மதுரை 5 தொலைபேசி:8-65